# கணக்கீடு

**12**

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## தரம் 13

**காசு பாய்ச்சல் கூற்று**

### வினாக்கள் மற்றும் விடைகள்

01. வரையறுக்கப்பட்ட அன்சாரி பொதுக்கம்பனியின் 2020.03.31 திகதிக்கும் 2021.03.31 திகதிக்கும் தயாரிக்கப்பட்ட நிதி நிலமைக்கூற்று பின்வருமாறு.

(000)

| | 2020.03.31 | 2021.03.31 |
|---|---|---|
| நடைமுறையல்லாச் சொத்து | | |
| ஆதனம் பெறி உபகரணம் (தேறியது) | 12000 | 25000 |
| பாவனை சொத்துரிமை | 6000 | 5400 |
| 10% நிலையான வைப்பு | 1000 | 1000 |
| நடைமுறைச் சொத்து | 650 | 475 |
| இருப்பு | 1100 | 1125 |
| வியாபார வருமதிகள் | 2110 | 3750 |
| காசும் காசுக்கு சமனானதும் | 22860 | 36850 |
| உரிமையும் பொறுப்பும் | | |
| கூறப்பட்ட மூலதனம் | | |
| சாதாரண பங்கு மூலதனம் | 10000 | 12000 |
| காணி மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | - | 2000 |
| பொது ஒதுக்கம் | 1000 | 1500 |
| நிறுத்தி வைத்த உழைப்பு | 4350 | 4700 |
| நடைமுறையல்லா பொறுப்பு | | |
| 15% வங்கிக்கடன் | - | 10000 |
| குத்தகை கடன்கொடுத்தோர் | 5600 | 4800 |
| நடைமுறைப் பொறுப்பு | | |
| வியாபார சென்மதிகள் | 1000 | 650 |
| வரி ஏற்பாடு | 350 | 700 |
| குத்தகைப் பொறுப்பு | 560 | 400 |
| கொடுக்க வேண்டிய வட்டி | - | 100 |
| | 22860 | 36850 |

2021.03.31 ன் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் மற்றும் வேறு வருமானங்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| விற்பனை | 8950 |
| விற்பனைக்கிரயம் | (3450) |
| மொத்த இலாபம் | 5500 |
| ஏனைய வருமானம் | 300 |
| | 5800 |



BUSINESS & COMMERCE BRANCH

| | |
|---|---|
| நிர்வாகச் செலவு | (4200) |
| வரிக்குமுன் இலாபம் | 1600 |
| வுரி | (500) |
| வருடத்துக்கான இலாபம் | 1100 |

மேலதிகத் தகவல்கள்

(1) கம்பனி வருடத்தினுள் சாதாரணபங்கு வழங்கியுள்ளது. வருடத்தினுள் பொது ஒதுக்கத்துக்கு 500 000 மாற்றப்பட்டுள்ளது.

(2) வருடத்தினுள் காணி மீள்மதிப்பீடு செய்யப்பட்டதுடன் மீள்மதிப்பீட்டு மிகை காணப்படுவதுடன் இந்த சொத்து இதற்கு முந்திய வருடத்தில் முதல் முறையாக மீள் மதிப்பீடு செய்யப்பட்ட போது 1000 000 இலாபம் பெறப்பட்டுள்ளது.

(3) 2021.01.01 ல் இலாபத்துடன் மோட்டார் வாகனமொன்று காசுக்கு விற்கப்பட்டது. இந்த மோட்டார் வாகனம் 2018.04.01 ம் திகதி 120 000 க்கு கொள்வனவு செய்யப்பட்டதுடன் பெறுமானத் தேய்வு கிரயத்திற்கு வருத்திற்கு 10% பெறுமானத்தேய்வு இடுவது கம்பனியின் கொள்கையாகும். கம்பனி வேறு சொத்துக்களை அகற்றுதல் செய்யவில்லை.

(4) நிர்வாகச் செலவினுள் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அ. பெறுமானத்தேய்வு – 1,610,000

ஆ. குத்தகைச் சொத்து பெறுமானத்தேய்வு – 600,000

இ. கடன்வட்டி – 150,000

ஈ. குத்தகை கடன் வட்டி – 220,000

(5) பங்குதாரருக்கு இவ்வருடத்தினுள் பங்குலாபம் வழங்கப்பட்டுள்ளது.

(6) பிற வருமானத்தினுள் சொத்து அகற்றல் வருமானமும், நிலையான வைப்பு வட்டியும் அடங்கும்.

வேண்டப்படுவது:

01) LKAS 7 (காசுப்பாய்ச்சல் கூற்று) LKAS 7 க்கு அமைவாக 2021.03.31 ம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான அமைய காசுப்பாய்ச்சல் கூற்றை செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு அமைய நேரில் முறையில் தயாரிக்க.

02) நடைமுறை ஆண்டுக்கான பின்வரும் வீதங்களை கணிப்பிடுக.

(அ) நடைமுறை வீதம்

(ஆ) தேறிய இலாப வீதம்

(இ) உரிமை மீதான திரும்பல் வீதம்

(ஈ) கடன் வீதம்

(உ) வட்டி காப்பு வீதம்

BUSINESS & COMMERCE BRANCH

**விடை :**

அன்சாரி பொதுகம்பனி 2021.03.31 முடிவடைந்த வருடத்துக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| செயற்பாட்டு நடவடிக்கை | | |
|---|---|---|
| வரிக்கு முன்னரான இலாபம் | 1600 | |
| செம்மையாக்கல் - பெறுமானத்தேய்வு | 2210 | |
| கடன் வட்டி | 150 | |
| குத்தகை கடன் வட்டி | 220 | |
| சொத்து அகற்றல் இலாபம் | (200) | |
| முதலீட்டு வட்டி | (100) | |
| மீள்மதிப்பு மிகை | (1000) | |
| <u>தொழிற்படு மூலதன அசைவு</u> | | |
| இருப்பு குறைவு | 175 | |
| கடன்பட்டோர் பெறுவனவு (மாற்றம்) | 125 | |
| கடன்கொடுத்தோர் கொடுப்பனவு (மாற்றம்) | (350) | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் மூலம் உருவான ஈடுபடுத்திய காசு | 2830 | |
| (-) செலுத்திய வரி | 150 | |
| (-) செலுத்திய வட்டி | 320 | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் உருவான ஈடுபடுத்திய தேறிய காசுப்பாய்ச்சல் | | 2360 |
| <u>முதலீட்டு நடவடிக்கைகள்</u> | | |
| ஆதனம் பொறி உபகரணம் கொள்வனவு | (12600) | |
| பெற்ற முதலீட்டு வட்டி | 100 | |
| மோட்டார் வாகனம் விற்பனை | 1190 | |
| முதலீட்டு நடவடிக்கைகளில் மூலம் உருவான ஈடுபடுத்திய காசு | | (11310) |
| <u>நிதியீட்டு நடவடிக்கைகள்</u> | | |
| பங்கு வழங்கல் மூலம் பெற்ற காசு | 2000 | |
| வங்கிக்கடன் | 10000 | |
| செலுத்திய பங்கிலாபம் | (250) | |
| நிதக்குத்தகை தவணைக்கட்டணம் | (960) | |
| நிதியீட்டு நடவடிக்கைகளில் உருவான ஈடுபடுத்திய தேறிய காசுப்பாய்ச்சல் | | 10790 |
| காசும் காசுக்கு சமனானவைகளின் தேறிய மாற்றம் | | 1840 |
| + ஆரம்ப காசும் காசுக்கு சமமான உருப்படிகள் | | 2110 |
| இறுதி காசும் காசுக்கு சமனான உருப்படிகள் | | 3950 |

1. சொத்து மீள்மதிப்பீட்டுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 2020.03.31 மீதி | 12000 | சொத்து அகற்றல் | 12000 |
| அகற்றுதல் | 210 | பெறுமானத்தேய்வு | 1610 |
| மீள்மதிப்பீட்டு மிகை | 3000 | | |
| மீதி | 12600 | | |
| | | 2021.03.31 | 25000 |
| | 27810 | | 27810 |

2. நடைமுறை வீதம் $= \frac{\text{நடைமுறைச்சொத்து}}{\text{நடைமுறைப்பொறுப்பு}} = \frac{5450}{1850} = 2.95$

BUSINESS & COMMERCE BRANCH

3. மொத்த இலாபவீதம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை}}$ X 100 = $\frac{1100}{8950}$ X 100 =12.29

4. உரிமை மீதான திரும்பல் வீதம் = $\frac{\text{நிதியாண்டுக்கான இலாபம்}}{\text{உரிமையாண்மை}}$ X 100

= $\frac{1100}{20200}$ X 100

= 5.45

5. கடன் வீதம் = $\frac{\text{கடன் மூலதனம்}}{\text{மொத்த மூலதனம்}}$ X 100

= $\frac{14\ 800}{20\ 200}$ X 100

= 0.7

6. வட்டிகாப்பு வீதம் = $\frac{\text{வரிக்கு முன்னதான இலாபம் + வட்டி}}{\text{வட்டி}}$

= $\frac{1970}{370}$ = 5.32

02. வரையறுக்கப்பட்ட நிசா கம்பனியின் 2021.04.01 ல் ஆரம்பிக்கப்பட்ட பொது கம்பனி 2022.03.31 ல் பிரித்தெடுக்கப்பட்ட நிதிநிலமைக்கூற்று தகவல் வருமாறு.

| | (000) |
|---|---|
| ஆதன பொறி உபகரணம் (கிரயம்) | 4500 |
| முதலீடு 10% | 1000 |
| இருப்பு | 800 |
| வியாபார வருமதிகள்(தேறியது) | 630 |
| காசும் காசுக்கு சமனானதும் | 1770 |
| மொத்த சொத்து | 8700 |
| உரிமையாண்மை – சாதாரண பங்கு | 6600 |
| வரி | 1200 |
| அட்டுறு கடன்வட்டி | 50 |
| வியாபார சென்மதிகள் | 800 |
| நிறுத்தி வைத்த இலாபம் | 95 |
| | 8700 |

2022.03.31 க்கான மேலதிக தகவல்கள்

(1) வருடத்துக்கான பெறுமானத்தேய்வு ரூ.500 000, வரி ரூ.600 000
(2) இடைக்கால பங்கு இலாபம் ரூ. 200 000 வருடத்தினுள் வழங்கப்பட்டுள்ளது.
(3) நிறுத்தி வைத்த அலாபத்தில் ரூ. 600 000 மூலதனமாக்கப்பட்டுள்ளது.
(4) முதலீடு செய்யப்பட்ட திகதி 2022.10.01
(5) வியாபார வருமதிகளின் 10% ஐயக்கடன் ஏற்பாடு செய்வது கம்பனியுடைய வழமையாகும்.

BUSINESS & COMMERCE BRANCH

வேண்டப்படுவது:

LKAS 7 (காசுப்பாய்ச்சல் கூற்று) LKAS 7 க்கு அமைவாக 2022.03.31 ம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான அமைய காசுப்பாய்ச்சல் கூற்று (நேரில் முறையிலான செயற்பாட்டு நடவடிக்கை காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்க.)

விடை.

வரையறுக்கப்பட்ட நிசா பொதுக்கம்பனியின் 2022.03.31 ல் முடிவடைந்த வருடத்துக்கான காசுப்பாய்ச்சல் கூற்று.

| | | |
|---|---|---|
| <u>செயற்பாட்டு நடவடிக்கை</u> | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | 2600 | |
| செம்மையாக்கல் - பெறுமானத்தேய்வு | 500 | |
| அடகுகடன் வட்டி | 70 | |
| முதலீட்டு இலாபம் | (50) | |
| <u>தொழிற்படு மூலதன அசைவு</u> | | |
| இருப்பு அதிகரிப்பு | (800) | |
| கடன்பட்டோர் பெறுவனவு (மாற்றம்) | (700) | |
| கடன்கொடுத்தோர் கொடுப்பனவு (மாற்றம்) | 800 | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் மூலம் உருவான ஈடுபடுத்திய காசு | 2420 | |
| (-) செலுத்திய வரி | (550) | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் உருவான ஈடுபடுத்திய தேறிய காசுப்பாய்ச்சல் | | 1870 |
| <u>முதலீட்டு நடவடிக்கைகள்</u> | | |
| ஆதனம் பொறி உபகரணம் கொள்வனவு | (5000) | |
| முதலீடு | (1000) | |
| முதலீட்டு இலாபம் | 100 | |
| முதலீட்டு நடவடிக்கைகளில் மூலம் உருவான ஈடுபடுத்திய காசு | | 5900 |
| <u>நிதியீட்டு நடவடிக்கைகள்</u> | | |
| செலுத்திய இடைக்கால பங்கிலாபம் | (200) | |
| பங்கு வழங்கல் மூலம் பெற்ற காசு | (6000) | |
| நிதியீட்டு நடவடிக்கைகளில் உருவான ஈடுபடுத்திய தேறிய காசுப்பாய்ச்சல் | | 5800 |
| காசும் காசுக்கு சமனானவைகளின் தேறிய மாற்றம் | | 1770 |
| (+) ஆரம்ப காசும் காசுக்கு சமமான உருப்படிகள் | | - |
| இறுதி காசும் காசுக்கு சமனான உருப்படிகள் | | 1770 |

செய்கை:

நிறுத்தி வைத்த இலாபம்

| | | | |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் வழங்கல் | 600 | இலாபம் | 2000 |
| காசு | 200 | | |
| மீதி | 1200 | | |

BUSINESS & COMMERCE BRANCH

| | | | |
|---|---|---|---|
| | 27810 | | 27810 |
| | | மீதி | 1200 |

| | |
|---|---|
| வருட இலாபம் | 2000 |
| வரி | 600 |
| வரிக்குமுன் இலாபம் | 2600 |

03. செந்தில் பொது கம்பனியின் 2022.03.31 ல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபமும் னைய முற்றடக்க வருமானமும் நிதிநிலமைக்கூற்றும் பின்வருமாறு.

வரையறுக்கப்பட்ட செந்தில் பொதுக்கம்பனியின்
2022.03.31 ன் முடிவடைந்த வருடத்துக்கான
வருமானகூற்றும் ஏனைய முற்றடக்க வருமானமும்
(ரூபா.000)

| | |
|---|---|
| விற்பனை | 1600 |
| விற்பனைக்கிரயம் | (500) |
| மொத்த வருமானம் | 1100 |
| ஏனைய வருமானம் | |
| - நிலையான சேமிப்பு வட்டி | 1350 |
| விநியோகச் செலவு | (120) |
| நிர்வாகச் செலவு | (610) |
| நிதிச் செலவு | (50) |
| வரிக்குமுன் இலாபம் | 570 |
| வரி | (150) |
| வருடத்துக்கான இலாபம் | 420 |
| <u>ஏனைய முற்றடக்க வருமானம்</u> | |
| மீள்மதிப்பீட்டு மிகை | 500 |
| மொத்த முற்றுமடங்கிய வருமானம் | 920 |

வரையறுக்கபட்ட செந்தில்பொதுக்கம்பனியின் 2022.03.31 ல் முடிவடைந்த வருடத்துக்கான
நிதிநிலமைக்கூற்று
ரூபா.000

| | 2021.03.31 | 2022.03.31 |
|---|---|---|
| <u>நடைமுறையல்லாச் சொத்து</u> | | |
| ஆதனம் பெறி உபகரணம் | 12000 | 13800 |
| 10% நிலையான வைப்பு | 500 | 1500 |
| <u>நடைமுறைச் சொத்து</u> | | |
| இருப்பு | 50 | 70 |
| வியாபார வருமதிகள் | 220 | 180 |
| நிதிச்செலவு | 1690 | 290 |
| அட்டுறு கடன் வட்டி | - | 100 |
| | 14460 | 15940 |



BUSINESS & COMMERCE BRANCH

| | | |
|---|---|---|
| <u>உரிமையும் பொறுப்பும்</u> | | |
| கூறப்பட்ட மூலதனம் | 8000 | 10000 |
| <u>ஒதுக்கங்கள்</u> | | |
| காணி மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 500 | 1000 |
| பொது ஒதுக்கம் | 3000 | 2000 |
| நிறுத்தி வைத்த உழைப்பு | 500 | 820 |
| | | |
| <u>நடைமுறையல்லா பொறுப்பு</u> | | |
| 10% வங்கிக்கடன் | 1500 | 1300 |
| | | |
| <u>நடைமுறைப் பொறுப்பு</u> | | |
| வியாபார சென்மதிகள் | 800 | 150 |
| அட்டுறு நிர்வாகச்செலவு | 120 | 100 |
| வரி ஏற்பாடு | 30 | 50 |
| அட்டுறு கடன்வட்டி | 10 | 20 |
| | 14460 | 15940 |

மேலதிக தகவல்கள்:

1) ரூபா. 2500 00 கிரயமுடைய காணி நிதியாண்டினுள் ரூபா. 3000 000 மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. மேலும் ரூபா. 1400 000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்று வருடத்தினுள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. எல்லா சொத்துக்களும் நிர்வாகத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும்.
2) வருடத்தினுள் இடைக்கால பங்கிலாபம் ரூபா.100 000 வழங்கப்பட்டது.
3) நிதிச்செலவினுள் கடன்வட்டி மாத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ளது.
4) வருடத்தினுள் ரூபா. 40 அற்கு 50 000 பங்குகள் வழங்கப்பட்டதுடன் இதற்காக வேண்டி ரூபா. 50 பொது ஒதுக்கம் பயன்படுத்தப்பட்டதுடன் மீதி பணமாகப் பெறப்பட்டது.

விடை.

செந்தில் பொது கம்பனியின்
2022.03.31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான
காசுப்பாய்ச்சல் கூற்று

| | | |
|---|---|---|
| <u>செயற்பாட்டு நடவடிக்கை</u> | | |
| நிர்வாகச்செலவு | (330) | |
| வியாபார சென்மதி | (670) | |
| வியாபார வருமதி | 1640 | |
| விநியொகச் செலவு | (120) | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் மூலம் உருவான ஈடுபடுத்திய காசு | | 520 |
| (-) செலுத்திய வரி | (130) | |
| (-) செலுத்திய வட்டி | (40) | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் உருவான ஈடுபடுத்திய தேறிய காசுப்பாய்ச்சல் | | 350 |
| | | |
| <u>முதலீட்டு நடவடிக்கைகள்</u> | | |
| மோட்டார் வாகனம் கொள்வனவு | (1600) | |
| நிலையான வைப்பு | (1000) | |
| நிலையான வட்டி | 150 | |
| முதலீட்டு நடவடிக்கைகளில் மூலம் உருவான ஈடுபடுத்திய காசு | | (2450) |
| | | |
| <u>நிதியீட்டு நடவடிக்கைகள்</u> | | |

BUSINESS & COMMERCE BRANCH

| | | |
|---|---|---|
| இடைக்கால பங்கிலாபம் | (100) | |
| பங்கு வழங்கல் | 1000 | |
| வங்கிக்கடன் | (200) | |
| நிதியீட்டு நடவடிக்கைகளில் உருவான ஈடுபடுத்திய தேறிய காசுப்பாய்ச்சல் | | 700 |
| காசும் காசுக்கு சமனானவைகளின் தேறிய மாற்றம் | | (1400) |
| (+) ஆரம்ப காசும் காசுக்கு சமமான உருப்படிகள் | | 1690 |
| இறுதி காசும் காசுக்கு சமனான உருப்படிகள் | | 290 |

செய்கை:

வியாபார வருமதி கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 220 | காசு | 1640 |
| விற்பனை | 1600 | மீதி | 180 |
| | 1820 | | 1820 |

வியாபார சென்மதி கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 670 | மீதி | 800 |
| மீதி | 650 | கொள்வனவு | 520 |
| | 1320 | | 1320 |

வரி கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 130 | மீதி | 30 |
| மீதி | 50 | வருமானக்கூற்று | 150 |
| | 180 | | 180 |

ஆதன பொறி உபகரணம் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 12000 | மீதி | 300 |
| மீள்மதிப்பீட்டு மிகை | 500 | வருமானக்கூற்று | 150 |
| காசு | 1600 | மீதி | 13800 |
| | 14100 | | 14100 |

BUSINESS & COMMERCE BRANCH

நிர்வாகச் செலவு கணக்கு

| | | | |
|---|---|---|---|
| பெறுமானத்தேய்வு | 300 | ஆரம்ப மீதி | 120 |
| காசு | 330 | வருமானக்கூற்று | 610 |
| மீதி | 100 | | |
| | 730 | | 730 |

கடன்வட்டி கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 40 | மீதி | 10 |
| மீதி | 20 | வருமானக்கூற்று | 50 |
| | 60 | | 60 |

<u>விற்பனைக்கிரயம்</u>

| | |
|---|---|
| ஆரம்ப அருப்பு | 50 |
| கொள்வனவு | 520 |
| | 570 |
| (-) இறுதி அருப்பு | (70) |
| வருடத்துக்கான இலாபம் | 500 |

04. வரையறுக்கப்பட்ட பொது கம்பனியின் 2022.03.31 ம் திகதி மற்றும் 2021.03.31 ம் திகதிக்கான சுருக்கமான நிதிநிலமைக்கூற்று

ரூபா.000

| | 2021.03.31 | 2022.03.31 |
|---|---|---|
| ஆதனம் பொறி உபகரணம்(தேறிய பெறுமதி) | 45150 | 53250 |
| இருப்பு | 10875 | 14625 |
| வியாபார வருமதிகள் | 14125 | 12750 |
| காசும், காசுக்கு சமனானதும் | 2250 | 3750 |
| மொத்த சொத்து | 74400 | 84375 |
| | | |
| <u>கூறப்பட்ட மூலதனம்</u> | | |
| சாதாரண மூலதனம் | 30000 | 42000 |
| <u>ஒதுக்கங்கள்</u> | | |
| நிறுத்தி வைத்த உழைப்பு | 3000 | 9750 |
| | | |
| வியாபார சென்மதிகள் | 11100 | 6525 |
| வரி | 900 | 750 |
| வங்கி மீதி | 1350 | 2100 |
| உரிமையாண்மையும் மொத்த பொறுப்புகளும் | 14460 | 15940 |

BUSINESS & COMMERCE BRANCH

2022.03.31 ம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான மேலதிகத் தகவல்கள் வருமாறு.

1) 2021.10.01 ம் திகதி ரூபா. 600 000 பெறுமதியான மோட்டார் வண்டி ஒன்று விற்பனை செய்யப்பட்டது. இந்த மோட்டார் வாகனம் 2019.04.01 ல் ரூபா. 4500 000 கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கு நேர்கோட்டு முறையில் 20% பெறுமானத்தேய்வு இடப்பட்டது. இந்த வருடத்துக்குள் உபகரணங்கள் உடன் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
2) வருடத்தினுள் மிகையுடன் கூயெ காணி மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. வேறு மீள்மதிப்பீட்டு இல்லை.
3) வருடத்துக்கான பெறுமானத்தேய்வு ரூபா. 3150 000 வரிச்செலவு ரூபா.1740 000
4) கம்பனி ரூபா.3000 000 நிறுத்தி வைத்த வைத்த இலாபம் மூலதனம் ஆக்கப்பட்டது.
5) வருடத்தினுள் இக்கம்பனி இடைக்கால பங்கு இலாபமாக ரூபா.1800 000 செலுத்தியதுடன் 100 000 பங்கு பொது மக்களுக்கு வழங்கி பெறப்பட்டது.

வேண்டப்பட்டது.

LKAS 7 (காசுப்பாய்ச்சல் கூற்று) அமைவாக 2022.03.31 ம் திகதி முடிவடைந்த வரையறுக்கப்பட்ட மகுரூப் பொதுகம்பனியின் காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்குக.

விடை.

மகுரூப் பொது கம்பனியின்
2022.03.31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான
காசுப்பாய்ச்சல் கூற்று

| | | |
|---|---|---|
| <u>செயற்பாட்டு நடவடிக்கை</u> | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | 12990 | |
| <u>செம்மையாக்கல்</u> | | |
| பெறுமானத்தேய்வு | 3150 | |
| மோட்டார் வாகன விற்பனை இலாபம் | (600) | |
| | 15540 | |
| <u>தொழிற்படு மூலதன அசைவு</u> | | |
| இருப்பு அதிகரிப்பு | (3750) | |
| வியாபார சென்மதி குறைவு | 3375 | |
| வியாபார வருமதி குறைவு | (4575) | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் மூலம் உருவான ஈடுபடுத்திய காசு | 10590 | |
| (-) வரி | 1890 | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் உருவான ஈடுபடுத்திய தேறிய காசுப்பாய்ச்சல் | | 8700 |
| <u>முதலீட்டு நடவடிக்கைகள்</u> | | |
| இயந்திரம் கொள்வனவு | (12000) | |
| மோட்டார் வாகன விற்பனை | 2850 | |
| முதலீட்டு நடவடிக்கைகளில் மூலம் உருவான ஈடுபடுத்திய காசு | | 9150 |
| <u>நிதியீட்டு நடவடிக்கைகள்</u> | | |
| பங்கிலாப கொடுப்பனவு | 1800 | |
| பங்கு வழங்கல் | 9000 | |
| வங்கிக்டன் செலுத்தியது | 6000 | |
| நிதியீட்டு நடவடிக்கைகளில் உருவான ஈடுபடுத்திய தேறிய காசுப்பாய்ச்சல் | | 1200 |
| காசும் காசுக்கு சமனானவைகளின் தேறிய | 2250 | |

BUSINESS & COMMERCE BRANCH

| | | |
|---|---|---|
| மாற்றம்<br>மேலதிகப்பற்று | (1350) | |
| (+) ஆரம்ப காசும் காசுக்கு சமமான உருப்படிகள் | 3750 | |
| இறுதி காசும் காசுக்கு சமனான உருப்படிகள் | (2100) | |
| | | 1650 |

செய்கை:

வரிக்கு முன் இலாபம்

| | | | |
|---|---|---|---|
| பொது ஒதுக்கத்துக்கு மாற்றியது | 3000 | மீதி | 3300 |
| இடைக்கால இலாபம் | 1800 | வரிக்கு முன் இலாபம் | 12990 |
| வரி | 1740 | | |
| மீதி | 9750 | | |
| | 16290 | | 16290 |

வரி கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 18900 | மீதி | 900 |
| மீதி | 750 | வருமானக்கூற்று | 1740 |
| | 2640 | | 2640 |

பங்கு மூலதனம் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| | | மீ/கீ/கொ/வ | 30000 |
| | | வருமானக்கூற்று | 3000 |
| | | காசு | 9000 |
| | 42000 | | 42000 |

ஆதனம் பொறி உபகரணம் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ/கீ/கொ/செ | 45150 | மீ/கீ/கொ/வ | 4500 |
| மீள்மதிப்பீட்டு மிகை | 1500 | | 13800 |
| பெறுமானத்தேய்வு | 2250 | | |
| | | மீ/கீ/கொ/செ | |
| | 42000 | | 42000 |

சொத்து அகற்றல் கணக்கு

BUSINESS & COMMERCE BRANCH

| | | | |
|---|---|---|---|
| சொத்துக்கிரயம் | 4500 | பெறுமானத்தேய்வு | 2250 |
| வருமானக்கூற்று | 600 | காசு | 2850 |
| | 5100 | | 5100 |

நிவ் லங்கா நிறுவனம் 2022.03.31 ல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிநிலமைக்கூற்று

நிவ் லங்கா நிறுவனத்தின்
2022.03.31 ம் திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான
இலாபம் மற்றும் முற்றுமடங்கிய வருமானக்கூற்று

| | | |
|---|---|---|
| விற்பனை | | 23 750 |
| விற்பனைக்கிரயம் | | (11 250) |
| மொத்த இலாபம் | | 12 500 |
| ஏனைய இலாபம் | | 1 250 |
| செலவுகள் | | 13 750 |
| நிர்வாகச் செலவு | 3 500 | |
| விநியோகச்செலவு | 4 000 | |
| நிதிச்செலவு | 1 000 | |
| | | (8 500) |
| வரிக்கு முன் இலாபம் | | 5 250 |
| வருடத்துக்கான வரி | | (1 500) |
| வரிக்குபின் இலாபம் | | 3 750 |

நிவ் லங்கா நிறுவனத்தின்
2021.03.31, 2022.03.31 திகதிகளில்
நிதிநிலமைக்கூற்று

ரூபா.(000)

| | 2022.03.31 | 2021.03.31 |
|---|---|---|
| ஆதனம் பொறி உபகரணம் | 11750 | 11500 |
| 10% முதலீடு | 6000 | 2000 |
| இருப்பு | 2500 | 3000 |
| வியாபார வருமதிகள் | 4000 | 3900 |
| காசும், காசுக்கு சமனானதும் | 1600 | 2100 |
| மொத்த சொத்து | 25850 | 21500 |
| உரிமையாண்மையும் பொறுப்பும் | | |
| கூறப்பட்ட மூலதனம் | | |
| சாதாரண மூலதனம் | 13000 | 12000 |
| ஒதுக்கங்கள் | | |
| நிறுத்தி வைத்த உழைப்பு | 4400 | 1400 |
| 15% வங்கிக்கடன் | 4000 | 6000 |
| வியாபார சென்மதிகள் | 3500 | 2400 |
| அட்டுறு வட்டி | 800 | 450 |
| அட்டுறு வரி | 150 | 250 |

BUSINESS & COMMERCE BRANCH

மேலதிக தகவல்:

1) நிறுவனத்தின் சகல கொடுக்கல்வாங்கல்களும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.
2) வங்கிக்கடன் கொடுப்பனவு செய்யப்பட்டது 2021.04.01 ம் திகதியாகும்.
3) ஆதன பொறி உபகரணம் ரூபா.200 000 க்கு கொள்வனவு செய்யப்பட்டது.
4) முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டது. 2022.03.21 திகதியாகும்.
5) நிறுவனம் இவ்வருடத்தினுள் இடைக்கால பங்கு இலாபம் வழங்கியுள்ளது.

வேண்டப்படுவது:

LKAS 7 (காசுப்பாய்ச்சல் கூற்று) அமைவாக 2022.03.31 ம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்குக.

BUSINESS & COMMERCE BRANCH

| 12 | கணக்கீடு<br>அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்<br>தரம் 13<br>வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் நிதிக்கூற்று |
|---|---|

# பகுதி 2

01. ஸ்ரீதேவி PLCயின் 2021.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பரீட்சை மீதி பின்வருமாறு.

ரூபா.000

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம் பொறி உபகரணம் | 82 000 | |
| விற்பனைக்கிரயம் | 48 700 | |
| வியாபார வருமதி | 14 000 | |
| விநியோகச்செலவு | 6 300 | |
| நிர்வாகச்செலவு | 4 800 | |
| ஏனைய செலவு | 2 420 | |
| நிதிச்செலவு | 500 | |
| செலுத்திய வரி 19/20 | 700 | |
| 20/21 | 2 500 | |
| இருப்புக்கள் | 3 800 | |
| குத்தகை கொடுப்பனவு | 2 880 | |
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | 6 400 | |
| 2020.04.01 ல் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு ஏற்பாடு | | 17 600 |
| விற்பனை | | 98 000 |
| வியாபார சென்மதி | | 4 180 |
| 2020.04.01 ல் விற்பனை உத்தரவாத ஏற்பாடு | | 620 |
| வழங்கப்பட்ட சாதாரண பங்குமூலதனம் | | 30 000 |
| 2020.04.01 ல் நிறுத்தி வைத்த வருவாய் | | 12 800 |
| மீள்மதிப்பிட்டு ஒதுக்கம் | | 1 000 |
| 2020.04.01 ல் வருமான வரி ஏற்பாடு | | 800 |
| வங்கிக்கடன் | | 10 000 |
| | 175 000 | 175 000 |

மேலதிக தகவல்கள்

2021.03.31 ல் முடிவடையும் ஆண்டிற்கான நிதியறிக்கையில் மேற்கொள்ள வேண்டிய சீராக்கம்.

i. மேலே உள்ள இருப்புக்கள் ரூ.800 000 கிரயமான இருப்புக்கள் ரூ.750 000 க்கு விற்பனை செய்யப்படலாம் என மதிப்பிடப்பட்டது.

ii. செலவுகளில் செலுத்தப்பட்ட தொகைகளும் நிதியாண்டுக்கான செலவுகளும் பின்வருமாறு

| செலவு | பணம் செலுத்தப்பட்டது | நிதியாண்டுக்கான செலவு |
|---|---|---|
| இயக்குனர் கட்டணம் | 700 000 | 800 000 |
| விற்பனைத்தரகு | 500 000 | 300 000 |
| வங்கிகடன் வட்டி | 600 000 | 700 000 |

BUSINESS & COMMERCE BRANCH

iii. 05.20.2021 இல் நிறுவனத்திற்கு எதிராக வாடிக்கையாளர் தாக்கல் செய்த வழக்கின் தீரப்பின் படி அன்றைய தினம் வாடிக்கையாளருக்கு ரூ.900 000 இழப்பீடு வழங்கப்பட வேண்டும் 01.12.2020 ல் வழக்கு வாடிக்கையாளரினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதன்போது இழப்பீட்டுக்கான ஒதுக்கீடு செய்யப்படவில்லை 01.06.2021 அன்று நிறுவனத்தின் நிதி அறிக்கைகளுக்கு இயக்குனர் சபை அங்கீகாரம் அளித்தது.

iv. ஆதனம் பொறி உபகரணம் மற்றும் அவற்றின் திரண்டதேய்வு பின்வருமாறு.

ரூபா.(000)

| விபரம் | 31.03.2021 இல் கிரயம் | 01.04.2020 இல் திரண்ட தேய்வு |
|---|---|---|
| காணி | 20 000 | - |
| கட்டிடங்கள் | 50 000 | 14 000 |
| அலுவலக உபகரணங்கள் | 12 000 | 3 600 |

01.10.2020 இல் ரூபா.3 000 000 கிரயமான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு சரியாக ஏடுகளில் பதிவு செய்யப்பட்டிருந்தது. காணி தவிர ஏனைய ஆதனம் பொறி உபகரணங்களுக்கு 5% பெறுமானத்தேய்வு மேற்கொள்ள வேண்டும். இது வரை பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்படவில்லை.

v. காணியானது மீள்மதிப்பீடு செய்வதற்கு முன் உள்ள பெறுமதியை குறிக்கும் 31.03.2021 இல் காணி ரூ.18 000 000 மற்றும் கட்டிடம் ரூ.35 000 000 ஆகவும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. அது தொடர்பான எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

vi. 01.04.2020 திகதியில் நிறுவனம் குத்தகை ஒப்பந்தம் செய்து 4 ஆண்டுகளுக்கு வாகனத்தினை பயன்படுத்துவதற்கான உரிமையினை பெற்றது ஒப்பந்தப்படி ரூ.2 880 000 ஆரம்ப கொடுப்பனவாக செலுத்தப்பட்டு குத்தகை கொடுப்பனவில் பதியப்பட்டது. வாகனத்தின் இனங்காணப்பட்ட பெறுமதி ரூ.12 000 000 ஆகும். ஒவ்வொரு ஆண்டு முடிவில் ரூ.2 880 000 தவணைப்பணம் செலுத்த வேண்டும். இவ்வாண்டுக்கான தவணைப்பணம் செலுத்தப்படவில்லை ஆரம்ப கொடுப்பனவு பதிவு செய்ததை தவிர ஏனைய வடவடிக்கைகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. நிகழ்ஆண்டு மற்றும் அடுத்த ஆண்டுக்கான குத்தகைவட்டி பின்வருமாறு.

| ஆண்டு | வட்டி |
|---|---|
| 20/21 | 912 000 |
| 21/22 | 715 000 |

vii. 31.03.2021 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மொத்த வருமான வரிப்பொறுப்பு ரூ.2 700 000 என மதிப்பிடப்பட்டது.

viii. வியாபாரவருமதிகளில் எதிர்பாரக்கை நட்டத்திற்கான படிகள் 5% ஆக மேற்கொள்ளப்படவேண்டும் வருட இறுதிவிற்பனையில் விற்பனை உத்தரவாத ஏற்பாடாக ரூ.700 000 பேணப்பட வேண்டும்.

ix. EPF பங்களிப்பாக ஊழியர் 10% உம் கம்பனி EPF க்கு 15% உம் ETF க்கு 3% பங்களிப்பு செய்யும் நிர்வாக செலவில் ஊழியருக்கு செலுத்திய தேறிய சம்பளம் ரூ.1800 000 சேர்க்கப்பட்டிருந்தது.



BUSINESS & COMMERCE BRANCH

x. நிறுத்தி வைத்த வருவாயில் இருந்து ரூ.500 000 பொது ஒதுக்கத்துக்கு மாற்றுவது எனவும் இறுதி பங்குலாபமாக ரூ.1 300 000 முன்மொழியப்பட்டது. 01.06.2021 இல் ரூ.2000 000 இடைக்கால பங்கிலாபமாக செலுத்தப்பட்டு ஏனைய செலவில் சேர்க்கப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது :

LKAS 01 அமைய ஸ்ரீதேவி PLCயின் பின்வருவனவற்றை தயாரிக்குக.

1) 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்தில் இலாபநட்டம்மற்றும்முற்றுமடங்கிய வருமானக்கூற்று.
2) 31.03.2021 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று
3) 31.03.2021 இல் உரிமையாண்மை மாற்றல் கூற்று (குறிப்புகள் உட்பட்)

02. வசந்த் PLCயின் 2022.03.31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான பரீட்சைமீதி.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| விற்பனை | | 98 000 |
| விற்பனைக்கிரயம் | 55 000 | |
| இருப்புக்கள் | 5 200 | |
| வியாபாரவருமதி | 18 000 | |
| வியாபார சென்மதி | | 20 000 |
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | 800 | |
| 2021.04.01 ல் விற்பனை உத்தரவாத ஏற்பாடு | | 270 |
| கூறப்பட்ட சாதாரண பங்குமூலதனம் | | 30 000 |
| 2021.04.01 ல் நிறுத்தி வைத்த வருவாய் | | 2 000 |
| நிர்வாகச்செலவு | 1 000 | |
| விநியோகச் செலவு | 2 000 | |
| ஏனைய செலவு | 1 110 | |
| செலுத்திய வரி 20/21 | 250 | |
| 21/22 | 370 | |
| 2021.04.01 ல் வருமான வரி ஏற்பாடு | | 260 |
| மீள்மதிப்பிட்டு ஒதுக்கம் | | 1 000 |
| பொது ஒதுக்கம் | | 400 |
| ஆதனம் பொறி உபகரணம் | 91 500 | |
| 2021.04.01 பெறுமானத்தேய்வு ஏற்பாடு | | 20 000 |
| உத்தரவாத செலவு | 200 | |
| எதிர்பார்க்கை நட்டங்களுக்கான ஏற்பாடு | | 900 |
| விற்பனை முற்பணம் | | 100 |
| வங்கிக்கடன் | | 4 000 |
| குத்தகை வட்டி | 1 500 | |
| | 176 930 | 176 930 |

மேலதிக தகவல்கள்

i. ஆதனம் பொறி உபகரணங்களின் கிரயம் மற்றும் பெறுமானத்தேய்வு பின்வருமாறு.

| | 2021.03.31 இல் கிரயம்/ மீள்மதிப்பீடு ரூ.(000) | 2021.04.01 பெறுமானத்தேய்வு ரூ.(000) |
|---|---|---|
| காணி | 30 000 | - |
| கட்டடம் | 45 000 | 16 000 |
| காரியாலய உபகரணம் | 15 000 | 4 000 |
| மோட்டார் வாகனம் | 1 500 | - |
| | 91 500 | 20 000 |

BUSINESS & COMMERCE BRANCH

ii. குறிப்பிட்ட நிதியாண்டுக்கான பெறுமானத்தேய்வு இதுவரை கணிக்கப்படவில்லை. குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட மோட்டார்வான் மட்டும் விநியோக நடவடிக்கைகளுக்கு பயன்படத்தப்படுகிறது. சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு நேர்கோட்டு முறையில் வருடத்துக்கு 20% கணிக்கப்படுதிறது.

iii. குத்தகை ஒப்பந்தம் அடிப்படையில் மோட்டார் வாகனம் 2021.04.01ம் திகதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அத்தினமே ரூபா.1 000 000 ஆரம்ப வைப்பு ரூ.500 000 க்கான ஆரம்ப செலவும் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை மோட்டார் வாகனக் கணக்கில் பதியப்பட்டுள்ளது. குத்தகைக் காலம் 4 வருடங்கள் ஆவதுடன், எதிர்பார்க்கப்படும் பயன்தரு அயுட்காலம் 5 வருடங்களாகும். குத்தகைக்கால முடிவில் சொத்து கம்பனிக்கு உரிமையாகாது. வருட குத்தகை வட்டி 10% ஆவதுடன் தவணைக்கட்டணம் ரூ.1500 000 ஆகும். 1வது வருடம் குத்தகை தவணைக்கட்டணம் செலுத்தப்பட்டதுடன் அது குத்தகை வட்டிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இந்த சொத்தின் ஆகக் குறைந்த நிகழ்கால பெறுமதி ரூ.4 500 000 ஆகும்.

iv. நிதியாண்டுக்கான வரிச்செலவு ரூ.800 000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

v. 2021.03.31 ம் திகதி பணிப்பாளர்களால் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.
(அ) சாதாரண பங்குக்கு ரூ.500 000 இறுதி இலாபம் பிரேரிக்கப்பட்டுள்ளது.
(ஆ) ரூ.100 000 நிறுத்திவைத்த இலாபத்தின் மூலம் பொது ஒதுக்கத்துக்கு மாற்றப்படுகிறது.

vi. 2021.04.01ம் திகதி காணி ரூ.40 000 000 க்கும் கட்டடம் முதல் தடவையாக ரூ.6 500 000 க்கும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. காணி முதல்தடவையாக மீள்மதிப்பீடு செய்த போதும் ரூ.800 000 மீள்மதிப்பீட்டு இலாபமாக இனங்காணப்பட்டிருந்தது.

vii. வருடத்தினுள் ரூபா.40 000 கடன்பட்டோர் ஒருவன் முறிடைந்ததுடன் மீதிக்கு வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்டத்துக்கான ஏற்பாடு 5% ஆகும்.

viii. 2021.01.01ல் ஊழியர் ஒருவர் ரூ.100 000 நட்டஈடு கேட்டுவழக்கு தொடர்துள்ளார். கம்பனி சட்டத்தரணிகள் இத்தொகையை செலுத்த வேண்டி வரும் என குறிப்பட்டுள்ளனர்.

ix. 2021.04.01ம் திகதி ரூ.800 000 க்கு விற்பனையின் பின் சேவையை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளதுடன் அத்தினத்தில் ரூ.100 000 விற்பனை முற்பணமாகப் பெறப்பட்டது. இந்நிறுவனம் 2021.06.01 ல் விற்பனையின் பின் சேவையோடு தொடர்பான பொருட்கள் வியாபார வருமதியாளருக்கு வழங்கப்பட்டதுடன் வருமதியாளரால் காசு செலுத்தப்பட்டது. நிறுவனம் முற்பணத் தொகையை மாத்திரம் உட்படுத்தியுள்ளது.

x. 2021.03.31ம் திகதி வங்கிக்கடன் பெற்றுள்ளதுடன் அடுத்த நிதியாண்டில் ஒப்பந்தத்தின்படி 4 சமமான தவணைகளில் செலுத்தி முடிக்க வேண்டும்.

xi. வருடத்துக்கான விற்பனையில் 2% விற்பனை உத்தரவாதம் மேற்கொள்ளப்படும். 2021.03.31ல் முடிவடையும் வருடத்தில் உத்தரவாதசெலவுகள் செலுத்தப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது:

LKAS 01 (நிதிக்கூற்றுகள்) 01 படி பிரசுரிப்பதற்கான வரைறுக்கப்பட்ட வசந் கம்பனியின் பின்வருவனவற்றை தயாரிக்குக.

1) 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்தில் இலாபநட்டம்மற்றும்முற்றுமடங்கிய வருமானக்கூற்று.
2) 31.03.2021 இல் உரிமையாண்மை மாற்றல் கூற்று (குறிப்புகள் உட்பட்)
3) 31.03.2021 இல் உள்ளவாறான நிதிநிலமைக்கூற்று

BUSINESS & COMMERCE BRANCH.

03. சுதன் பொதுக்கம்பனியின் 2022.03.31ம் திகதிக்கான பரீட்சைமீதி பின்வருமாறு.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம் பொறி உபகரணம் | 51 000 | |
| ஆதனம் பொறி உபகரணத்திரண்டதேய்வு (2021.04.01) | | 18 000 |
| வியாபார வருமதி, சென்மதி | 4 500 | 3 000 |
| விற்பனைக்கிரயம்/விற்பனை | 34 000 | 65 000 |
| நிர்வாகச்செலவு | 8 200 | |
| விநியோகச்செலவு | 5 100 | |
| நிதிச்செலவு | 3 250 | |
| ஏனையச்செலவு | 1 500 | |
| கூறப்பட்ட சாதாரணபங்கு மூலதனம் (750 000 பங்கு) | | 15 000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 2 400 |
| பொதுஒதுக்கம் | | 1 600 |
| நிறுத்திவைத்த வருவாய் | | 4 380 |
| இருப்பு (2022.03.31) | 6 200 | |
| குத்தகை கடன்கொடுத்தோர் (2021.04.01) | | 6 750 |
| 15% வங்கிக்கடன் | | 3 000 |
| முதலீட்டு வருமானம் | | 200 |
| காசுக்கட்டுபாட்டுக்கணக்கு மீதி | 2 340 | |
| விற்பனை உத்தரவாத ஏற்பாடு | | 350 |
| வரி ஏற்பாடு | | 360 |
| செலுத்திய வரி | 1 050 | |
| வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்ட ஏற்பாடு | | 600 |
| 3 மாத திறைசேரி உண்டியல் | 600 | |
| நிலையான வைப்பு (2022.05.20 முடிவடையும் திகதி) | 900 | |
| 18% முதலீடு | 2 000 | |
| | 120 640 | 120 640 |

மேலதிக தகவல்கள்:

2022.03.31 ல் முடிவடையும் வருடத்துக்கான நிதிநிலமைக்கூற்றை தயார் செய்வதற்கு முன் (சீராக்கம் செய்யப்படவேண்டிய) வேண்டிய விடயம்

i. நிறுவனம் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுவதுடன் இறுதி இருப்பு பின்வருமாறு

| | |
|---|---|
| மூலப்பொருள் இருப்பு | 1 500 000 |
| முடிவுப்பொருள் இருப்பு | 4 100 000 |
| குறைவேலை இருப்பு | 600 000 |
| | 6 200 000 |

ii. ஆதனபொறி உபகரணங்கள் மற்றும் பெறுமானத்தேய்வு தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | கிரயம் | பெறுமானத்தேய்வு ஏற்பாடு |
|---|---|---|
| காணி | 9 000 000 | |
| கட்டடம் | 18 000 000 | 4 750 000 |
| இயந்திரம் | 12 000 000 | 8 000 000 |
| குத்தகை சொத்துரிமை | 9 000 000 | 2 250 000 |
| மோட்டார் வாகனம் | 7 000 000 | 3 000 000 |
| | 45 000 000 | 18 000 000 |

iii. நிறுவனத்தின் காணி முதல் தடவையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டதுடன் இதன்போது மீள்மதிப்பீட்டு மிகை ரூபா.1400 000 ஆக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. இக்காணி 2022.03.31ம்

BUSINESS & COMMERCE BRANCH

திகதி மீள்மதிப்பீட்டின் போது ரூ.8000 000 என தெரிய வந்தது. ஆதன பொறி உபகரணங்களுக்கான வருடத்துக்கான பெறுமானத்தேய்வு பின்வருமாறு கணிப்பிடப்படுகிறது.

(அ) கட்டடம் 5% நேர்கோட்டு முறையில்

(ஆ) மோட்டார் வாகனம் 10% குறைந்து செல்லும் மீதி முறையில்

(இ) இயந்திர உபகரணம் 10% குறைந்து செல்லும் மீதி முறையில்

iv. இயந்திர உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பாவிக்கப்படுவதுடன் மோட்டார் வாகனம் 60% நிர்வாகத் தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

v. பயன்படுத்தும் உரிமையுடைய சொத்து 2020.04.01ம் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பயன்தரு ஆயுட்காலம் 4 வருடங்கள். குத்தகைக் காலமும் 4 வருடங்களாகும் குத்தகைக்கால முடிவில் சொத்து நிறுவனத்துக்கு சொந்தமாகும். இந்த சொத்து தொழிற்சாலைக்கு பயன்படுத்தப்படுகிறது. குத்தகை தவணைக்கட்டணம் ரூ.2750 000 ஆவதுடன் குத்தகை தவணைக்கட்டணத்தினுள்உள்ளடங்கியுள்ள வட்டி பின்வருமாறு.

2021.03.31 ரூபா.800 000

2022.03.31 ரூபா.600 000

2023.03.31 ரூபா.400 000

vi. நிறுவனம் விற்பனைக்கு 1% உத்தரவாதம் மேற்கொள்ளுகின்றது. 2022.03.31ல் முடிவடைந்த வருடத்தில் விற்பனை உத்தரவாதத்துக்காக ரூபா.250 000 செலுத்தி அது விநியோகக்கிரயத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

vii. வியாபார வருமதியில் உள்ள ஒருவர் 2022.04.30 முறிவடைந்து விட்டதாக நீதி மன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் படி அத்தொகையை மீளப் பெற்றுக்கொள்ள முடியாது என தீர்மானிக்கப்பட்டது. அதன் பெறுமதி ரூ.300 000 வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்டத்திற்கு 10% ஏற்பாடு செய்வது கம்பனியின் கொள்கையாகும்.

viii. தேறிய சம்பளம் மற்றும் கூலி செலுத்தியுள்ள காசு ரூ.2 700 000 இது நிர்வாகச்செலவில் வரவு வைக்கப்பட்டுள்ளது. ஊழியர் சேமலாப நிதி (EPF) க்கு ஊழியர் பங்களிப்பு 10% குறைக்கப்பட்டு இந்த சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான வேறு எந்த பதிவுகளும் இடம்பெறவில்லை. ஊழியர் சேமலாபநிதிக்கு தொழில்கொள்வோர் பங்களிப்பு 15% ஆகும்.

ix. வருடத்தினுள் செலுத்தப்பட்டுள்ள பணிப்பாளர் சம்பளம், கணக்காய்வு செலவு முறையே ரூபா.820000, ரூபா.380 000 ஆகும். அதே போல் 2022.03.31 ம் திகதிக்கு செலுத்தப்படவேண்டிய பணிப்பாளர் சம்பளம் மற்றும் கணக்காய்வு செலவு ரூபா.80 000, ரூபா. 120 000 ஆகும்.

x. இந்நிறுவனம் 2022.03.31 ல் 5:1 என்ற அடிப்படையில் உரிமைப்பங்கு வழங்கியுள்ளது. இதற்காக நிறுத்திவைத்த வருவாய் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது சம்பந்தமான எந்தப் பதிவுகளும் இடம்பெறவில்லை.

xi. 2022.03.31 இன் முடிவடைந்த வருடத்தினுள் செலுத்தப்பட்ட வரியினுள் 2020,2021 வருடங்களின் இறுதிக் காலாண்டுக்கான தொகையான ரூ.280 000 மற்றும் 2021,2022 வருடத்துக்கான முதல் காலாண்டு 3 க்கான வரி உள்ளடங்கும். அதேபோல் 2022.03.31 இன் முடிவடைந்த வருடத்தின் இறுதிக்காலாண்டுக்கான வரி ரூ.340 000 என மதிப்பீடு செய்யப்பட்டது.

xii. வாகன திருத்தத்துக்கு செலுத்திய ரூ.750 000 ஏனைய செலவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இச்செலவுகளுள் வங்கிக்கடனுக்குச் செலுத்திய வட்டி ரூ.400 000 உள்ளடங்கும்.

BUSINESS & COMMERCE BRANCH

xiii. நிதிக்கூற்றை வெளிப்படுத்துவதற்கான பணிப்பாளர்கள் 2022.06.15ம் திகதி அனுமதி வழங்கியதுடன் ஏற்பாடுகள் மற்றும் நிகழ்வுகள் இத்திகதிக்கு முன் நிகழ்ந்துள்ளது. சாதாரண பங்கொன்றுக்கு ரூ.250 படி பங்கு இலாபம் பிரேரிக்கப்பட்டுள்ளது. பொது ஒதுக்கத்துக்கு ரூ.1500 000 மாற்றப்படல். நிறுவனத்துக்கு சொந்தமான தொழிற்சாலையின் ஒரு பகுதியை அரசு சுவீகரித்து கொள்வதற்கு தீர்மானித்தது.

வேண்டப்படுவது:

LKAS 01 (நிதிக்கூற்றுகள்) 01 படி பிரசுரிப்பதற்கான வரைறுக்கப்பட்ட வசந் கம்பனியின் பின்வருவனவற்றை தயாரிக்குக.

1) 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்தில் இலாபநட்டம் மற்றும் முற்றுமடங்கிய வருமானக்கூற்று.
2) 31.03.2021 இல் உரிமையாண்மை மாற்றல் கூற்று (குறிப்புகள் உட்பட்)
3) 31.03.2021 இல் உள்ளவாறான நிதிநிலமைக்கூற்று

04. வரையறுக்கப்பட்ட அஸ்லி பொதுக்கம்பனியின் 2021.03.31 திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான பரீட்சைமீதி பின்வருமாறு.

| விபரம் | வரவு (ரூ000) | செலவு(ரூ000) |
|---|---|---|
| ஆதனம்பொறி உபகரணம் தேறிய பெறுமதி | 57 200 | |
| குத்தகை பயன்படுத்தும் உரிமை | 8 800 | |
| விற்பனை | | 106 700 |
| கொள்வனவு | 58 500 | |
| 2020.04.01 இருப்பு | 5 750 | |
| வியாபார வருமதி | 5 200 | |
| வியாபார சென்மதி | | 8 300 |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | | 25 000 |
| 2020.04.01ல் நிறுத்தி வைத்த வருவாய் | | 3 400 |
| நிர்வாகச்செலவு | 5 200 | |
| விநியோகச்செலவு | 7 600 | |
| நிதிச்செலவு | 850 | |
| 2020.04.01ல் ஏனைய செலவு | 900 | |
| வரி ஏற்பாடு | | 750 |
| செலுத்திய வரி | 2 900 | |
| 2020.04.01 விற்பனை உத்தரவாத ஏற்பாடு | | 800 |
| ஏனைய வருமானம் | | 1 000 |
| குத்தகைப்பொறுப்பு | | 8 800 |
| விற்பனை முற்பணம் | | 1 500 |
| இடைக்கால பங்கு இலாபம் | 300 | |
| காசும் காசுக்கு சமனானவையும் | 3 050 | |
| | 156 250 | 156 250 |

மேலதிக தகவல்கள்:

i. 2021.03.31 ல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிநிலமைக்கூற்றுகளை தயாரிப்பதற்கு முன் பின்வரும் ஏற்பாடுகளையும், நிகழ்வுகளையும் சீராக்கம் செய்தல் வேண்டும்.

(அ) 2021.07.15ல் பணிப்பாளர் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களை வெளியிடுவதற்கான அனுமதி வழங்கினார்.

(ஆ) 2021.03.31 திகதியில் இருப்புக்கிரயமும் தேறிய தேறத்தக்க பெறுமதியும் ரூ.2 400 000, ரூ.2 650 000 எவ்வாறாயினும் இந்த இருப்புக்கள் ரூ.300 000 விற்பனை செலவுடன் 2021.04.13ம் திகதி விற்பனை செய்யப்பட்டது.

BUSINESS & COMMERCE BRANCH

ii. குறிப்பிட்ட வருடத்துக்கான நிர்வாகசெலவு பின்வரும் உருப்படிகளை கொண்டுள்ளது.

| | ரூபா.000 |
|---|---|
| சம்பளமும் கூலியும் (தேறியது) | 1350 |
| இயக்குநர் கட்டணம் | 720 |
| கணக்காய்வு கட்டணம் | 900 |
| பெறுமானத்தேய்வு | 1450 |
| ஏனைய நிர்வாகச்செலவு | 780 |
| | |

iii. நிர்வாகச்செலவினுள் அடங்கியுள்ள சம்பளமும் கூலியும் கணிப்பிடப்பட்டது. ஊழியர் சேமலாபநிதி ஊழியர் பங்களிப்பு கழிக்கப்பட்ட பின், ஊழியர் மற்றும் தொழில் கொள்வோர் பங்களிப்பு 10%,15% ஆகும். ETF 3% (ஊழியர் நம்பிக்கை நிதியம்) ஆகும். EPF, ETF க்கான வருடத்தொகை இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை, கணக்குகளில் காட்டப்படவும் இல்லை.

iv. ஆதனபொறி உபகரணம் பெறுமானத்தேய்வு பின்வருமாறு.

| விபரம் | கிரயம்/ மீள்மதிப்பீட்டு தொகை(ரூ.000) | பெறுமானத் தேய்வுவீதம் | பெறுமானத் தேய்வுஒதுக்கம் (ரூ.000) | தேறிய பெறுமதி (ரூ000) |
|---|---|---|---|---|
| காணி | 35 000 | - | - | 35 000 |
| கட்டடம் | 15 000 | 5% | 3 000 | 12 000 |
| மோட்டார் | 10 000 | 20% | 4 000 | 6 000 |
| அலுவலக உபகரணம் | 7 000 | 10% | 2 800 | 4 200 |
| | 67 000 | | 9 800 | 57 200 |

